# நுண்ணிலைக் கற்பித்தல்

## வரலாறு

நுண்ணிலைக் கற்பித்தல் என்ற முறையை டுவைட் பிள்யூ ஆலன் என்பவரால் அமெரிக்காவில் உள்ள ஸ்டான்ஸ் போர்ட் பல்கலைக் கழகத்தில் 1963 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது பின்பு அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் நெதர்லாந்து போன்ற நாடுகளில் நுண்ணிலைக் கற்பித்தல் சோதனைகள் பல நடத்தப்பட்டது.

தற்காலத்தில் இந்தியாவிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளில் திரைப்படம், ஒலிநாடா, இணைப்பு, தொலைக்காட்சி மூலமாக நுண்ணிலைக் கற்பித்தல் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்தியாவில் விரிவுரை செய்துகாட்டல் விவரங்கள் போன்றவற்றின் மூலம் பேராசிரியர்களைக் கொண்டு கற்பிக்கப்படுகிறது.

## நுண்ணிலைக் கற்பித்தலின் வரையறைகள்

### ஆலன்

குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு குறைந்த கால அளவில் மாணவ- ஆசிரியரால் பயன்படுத்தப்படும் ஓர் ஆசிரியர் பயிற்சி உத்தியாகும்.

Downloaded From www.nagaicollege.com
Scanned by CamScanner

## நுண்ணிலைக் கற்பித்தலின் இயல்புகள்

* நுண்ணிலைக் கற்பித்தல் என்பது ஒரு பகுத்தாய்வு முறையாகும்
* ஆசிரியர் கல்வியில் புதுமையான முறையாகும்
* திறன்மிகு ஆசிரியர்களை உருவாக்கும் ஒரு கருவியாகும்.

## நுண்ணிலைக் கற்பித்தலின் படிகள்

* திறன் அளித்தல்
* விவாதித்தல்
* மாதிரிப் படம் பார்த்தல்
* பாடத்திட்டம் தயாரித்தல்
* நுண்ணிலைக் கற்பித்தல் பயிற்சி
* செயல் விளைவு கூறல்
* திரும்ப திட்டமிடல்
* மீண்டும் கற்பித்தல்
* மீண்டும் செயல்விளைவு கூறல்

## திறன் அளித்தல்

ஒரு திறனில் பயிற்சி பெற தொடங்குவதற்கு முன் அத்திறனைப் பற்றிய முழுமையான விவரங்களையும்

Downloaded From
www.nagaicollege.com
Scanned by CamScanner

உட்கூறுகளையும் பற்றி ஆசிரியர் அவசியம் அறிதல் வேண்டும்

விவாதித்தல்

மாணவ ஆசிரியர்கள் தங்களது சந்தேகங்களை வழிகாட்டும் ஆசிரியர் மூலமாக அல்லது வல்லுநர் மூலமாகவோ தீர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

மாதிரிப் பாடம் பார்த்தல்

ஒரு திறனின் உட்கூறுகளை எவ்வாறு கையாளுவது என்பதை ஆசிரியர் அல்லது வல்லுநர் மாதிரிப்பாடமாக நடத்திக் காட்டுவார்

பாடத்திட்டம் தயாரித்தல்

மாணவ ஆசிரியர் திறனையும், அதற்கு தகுந்த பாடப்பகுதியையும் தேர்ந்தெடுத்து சிறந்த முறையில் பாடத்தை திட்டமிட்டு தயாரித்தல் வேண்டும்

Downloaded From
www.nagaicollege.com
Scanned by CamScanner

நுண்ணிலைக் கற்பித்தல் பயிற்சி

ஒரு குறிப்பிட்ட திறன் பாடத்திட்டம் தயாரித்துப்பின் மாணவ ஆசிரியர் 5 அல்லது 10 எண்ணிக்கையிலான சக மாணவ ஆசிரியர்களுக்கோ அல்லது வகுப்பறை மாணவர்களுக்கோ 5-10 நிமிடங்களில் மதிப்பீடு செய்து பின்னூட்டம் அளிப்பதற்காக ஒளிப்பதிவு அல்லது சக மாணவ ஆசிரியர் அல்லது ஆசிரியர்கள் மூலமாக கற்பித்தல் பதிவு செய்யப்படுகிறது.

செயல்விளைவு தரல்

மாணவ ஆசிரியர்களுக்கு உடனடியாக பதிவு செய்யப்பட்ட ஒலி - ஒளிக்காட்சிகள் மூலமாகவோ அல்லது செய்யப்பட்ட தகவல்களின் அடிப்படையிலோ பின்னூட்டம் அளிக்கப்படுகிறது.

திரும்ப திட்டமிடல்

மாணவ ஆசிரியர் கொடுக்கப்பட்ட பின்னூட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் அத்திறனில் மேலும் மேம்பட்ட திறம்பட போதிக்க வேண்டும்.

Downloaded From
www.nagaicollege.com
Scanned by CamScanner


## மீண்டும் கற்பித்தல்

மாணவ ஆசிரியர் மீண்டும் திட்டம் இடப்பட்ட பாடத்திட்டத்தின் அடிப்படையில் மீண்டும் கற்பிக்கிறார்.

## மீண்டும் செயல்திறனாய்வு தருதல்

மாணவ - ஆசிரியர் தேர்ந்த கருத்துத் திறனில் மேலும் திறம் தோன்ற பாடம் கற்பிக்கும் முறை உற்று நோக்கப்பட்டு புதிய செய்யப்பட்டு மீண்டும் பின்னூட்டம் அளிக்கப்படுகிறது. இவை தேர்ந்தெடுத்த திறனில் முழுமையாக பயிற்சி பெறும்வரை தொடர்ந்து நடைபெறுகிறது.

## நுண்ணிலைக் கற்பித்தல் சுழற்சி




Downloaded From
www.nagaicollege.com
Scanned by CamScanner

## நுண்ணிலைக் கற்பித்தல் திறன்கள்

- தொடங்கும் திறன்
- பல்வகைத் தூண்டல் திறன்
- விளக்குதல் திறன்
- கரும்பலகையை பயன்படுத்தும் திறன்
- வலுவூட்டுநனை பயன்படுத்தும் திறன்
- பாடத்தை முடிக்கும் திறன்

## பல்வகைத் தூண்டல் திறன்

அர்வத்தை ஏற்படுத்தி வகுப்பில் மாணவர்களின் மனதை நிலைப்படுத்தி செய்யப்படும் பல்வகைத் தூண்டல்களின் தொகுப்பே பல்வகைத் தூண்டல்களைப் பயன்படுத்தும் திறன் எனப்படும்.

## உட்கூறுகள்

- அசைவு
- மெய்ப்பாடுகள்
- குரல் ஏற்றத் தாழ்வு
- கவனம் ஈர்த்தல்

Downloaded From
www.nagaicollege.com
Scanned by CamScanner

- மாணவர் ஈடுபாடு
- புலன் மாற்றம்
- நிறுத்தம்

அசைவு

ஆசிரியரின் இயக்கம் திட்டமிட்டு செயல்பட உதவுவதாக இருக்க வேண்டும். கலைச்சொற்கள், படங்கள், சூத்திரங்கள் விதிகள், இவற்றைக் கரும்பலகையில் எழுதும் போதும் உரையும் போதும் மாணவர்களின் செயல்பாடுகளை செய்துகாட்ட மேசை அருகிலும் இடம்விட்டு இடம் நகர்தல் அவசியம். இவ்வியக்கம் அசைவு எனப்படும்.

மெய்ப்பாடுகள்

பாடப்பொருளின் தன்மைக்கேற்ப ஆசிரியர் மொழிச்சாரா உணர்வுகளை வெளிப்படுத்துவது ஆகும். செய்கைகளைப் பயன்படுத்துவதும் மெய்ப்பாடு ஆகும்.

உதாரணம்

- முகம் சுளித்தல்
- முக மலர்ச்சி

Downloaded From www.nagaicollege.com
Scanned by CamScanner

### குரல் ஏற்றத் தாழ்வு

ஒரே சீரான பேச்சு ஒலிப்பு ஆசிரியரை சலிப்பு தன்மையைத் தோற்றுவிக்கும் இதனால் கவனக்குறைவு ஏற்பட்டு கற்றல் தடைப்படுகிறது. ஆகவே பாடப் பொருளுக்கு ஏற்ப குரல் ஏற்றத்தாழ்வு மிகவும் அவசியம்.

### கவனம் ஈர்த்தல்

இந்த இடத்தில் நன்றாக கவனியுங்கள். இது மிகவும் முக்கியமான கருத்து. இந்த படத்தைப் பாருங்கள் இதனைக் குறிக்கிறது, போன்ற சொற்களால் பயன்படுத்தும் போது மாணவர்களின் கவனம் கற்றலின் திசைத் திருப்பப் படுகிறது.

### மாணவர் ஈடுபாடு

ஒரு வகுப்பு முழுவதும் ஆசிரியரே பேசிக் கொண்டிருந்தால் மாணவர்களுக்குச் சலிப்பு ஏற்படும் இதனை தவிர்க்க மாணவர்களையும் பங்கேற்க செய்ய

Downloaded From
www.nagaicollege.com
Scanned by CamScanner

வேண்டும் மாணவர்களிடம் வினாக்களைக் கேட்டு அவர்களை விடையளிக்க செய்தல். பதிலை கரும்பலகையில் எழுதவைத்தல்

புலன் மாற்றம்

கற்பித்தலில் ஆசிரியர் பேசிக்கொண்டு இருந்தால் செவிப்புலன் மூலம் கற்றல் நிகழ்கிறது. கற்றல் உபகரணங்களை பயன்படுத்தும் போது கட்புலன் ஆகியவற்றைப் பயன்படுத்துவது மட்டும் அல்லாது முகர்தல், புலன் சுவைத்தல், புலன் தொடு ஆகியவை புலன் மாற்றம் எனப்படும்.

நிறுத்தம்

ஆசிரியர் தொடர்ந்து பேசும்போது மாணவர்களிடம் சலிப்பு ஏற்படுவதற்கு காரணமாக அமைகிறது. எனவே கற்பிக்கும் போது சற்று நேரம் பேச்சை நிறுத்தினால் மாணவர்கள் அனைவரும் கவனிக்கத் தொடங்குவர். அந்த பேச்சு நிறுத்தம் 10-15 நொடிகள் நீடிக்கலாம்.

Downloaded From
www.nagaicollege.com
Scanned by CamScanner

இளர் வினாக்கள் கேட்கும் திறன்

உட்கூறுகள்

* எண்ணத் தூண்டல்
* மென்மேலும் செய்தியை வரவழைத்தல்
* முழுமையான விளக்கம் பெறுதல்
* திசை திருப்புதல்
* பாடம் பற்றிய விழிப்புணர்வு

எண்ணத் தூண்டல்

ஆசிரியர் மாணவர்களிடம் வினாக்கள் கேட்கும்போது மாணவர்கள் விடை கூறாமல் இருக்கும்போது ஏற்ற நிகழ்வுகள் சிறு குறிப்புகள் அல்லது தொடர்புடைய தகவல்களை கூறி அவர்களது எண்ணத்தை தூண்டி உரிய பதிலை மாணவர்களை கூறச் செய்தல் ஆகும்.

மென்மேலும் செய்திகளை வரவழைத்தல்

ஆசிரியர் எதிர்பார்த்த விடையை மாணவர்கள் முழுமையாகத் தராதபோது ஆசிரியர் மென்மேலும்

Downloaded From www.nagaicollege.com
Scanned by CamScanner

வினாக்கள் கேட்டு மாணவர்களிடம் நான் எதிர்பார்க்கும் விடையை வரவழைத்தல் ஆகும்.

முழுமையான விளக்கம் பெறுதல்

மாணவர்களுக்கு தெரிந்த வேறொரு சூழ்நிலையில் சொல்லி அதைதற்போதைய சூழலுடன் பொருத்திப் பார்த்து விடையளிக்கச் செய்தல். தொடர்பு படுத்தும் நிகழ்வு ஏற்கனவே கற்பித்த பாடமாக இருக்கலாம்.

வினா திசை திருப்புதல்

ஆசிரியர் ஒரு மாணவர்களிடம் கேட்ட வினாக்களையே மற்ற மாணவர்களிடம் கேட்க வேண்டும். கேட்ட வினாக்கள் புரியாமல் மாணவர் விழிக்கும்போது வேறுவிதமாக மாற்றி கேட்க வேண்டும்.

பாடம் பற்றிய விழிப்புணர்வு

மாணவன் ஒரு விடையை உறுதியுடன் ஏன்?

Downloaded From
www.nagaicollege.com
Scanned by CamScanner

அவ்வாறு செய்கிறாய்? எப்படி? எதற்கு? போன்ற மேலும் சில வினாக்களை கேட்டு மாணவர்களை சிந்திக்க வைத்தல் விடைக்கான கருத்தை அறியச் செய்தல்.

விளக்குதல் திறன்

உட்கூறுகள்

* தொடங்கும் திறன்
* தொடர் இணைப்புச் சொற்கள்
* முக்கியக் கருத்துகளை பயன்படுத்துதல்
* மெய்ப்பாடுகள்
* முடிக்கும் வாக்கியம்

தொடங்கும் திறன்

பாடம் தொடங்குவதற்கு முன் ஆசிரியர் எந்த கருத்தைப் பற்றி படிக்கப் போகிறோம் என்பதை முதலில் அறிவிக்க வேண்டும் இது மாணவர்களை பாடவிளக்கத்திற்கு தயார் செய்து கொள்ள உதவுகிறது.

Downloaded From www.nagaicollege.com
Scanned by CamScanner

## தொடர் இணைப்புச் சொற்களைப் பயன்படுத்துதல்

இது அறிவுசார் தொடர் எனவும் அழைக்கப்படும் தொடர்பு வார்த்தைகளான ஆகையால், என்றால், இதனால், ஆகவே, எனவே, இதைப்போல்.... போன்றவற்றை பயன்படுத்தி கருத்துகள், செயல்கள், ஒன்றோடு ஒன்று தொடர்புபடுத்துதல் இதில் அடங்கும்.

## மெய்ப்பாடுகள்

மெய்ப்பாடுகள் மூலமாக ஆசிரியர் தான் விளக்கும் திறனை மென்மேலும் மேம்படச் செய்யலாம். ஆசிரியர் தன் உடல் உறுப்புகளை அசைப்பதன் மூலம் நடைபெறும்.

## முற்றுவிக்கும் வாக்கியம்

விளக்குதலின் இறுதியில் ஆசிரியர் தான் கற்பித்த பாடத்தை சுருக்கமாகக் கூறி மாணவர்களின் மனதில் இருக்கும் கருத்தை வலுப்படுத்துதல் மிகவும் அவசியம்.

Downloaded From www.nagaicollege.com
Scanned by CamScanner

# பல்வகைத் தூண்டல் திறன்

| உட்கூறுகள் | சுருக்க எழுத்துக்கள் |
| --- | --- |
| அசைவு | (அ) |
| மெய்ப்பாடு | (மெ) |
| குரல் ஏற்றத்தாழ்வு | (கு. ஏ. தா) |
| கவனம் ஈர்த்தல் | (க. ஈ.) |
| வினை மாற்றம் | (வி. மா) |
| நிறுத்தம் | (நி) |
| புலன் மாற்றம் | (பு. மா) |

பயிற்சி ஆசிரியர் பெயர் : மு. மூவேந்தன்

திறன் : பல்வகைத் தூண்டல் திறன்

பாடம் : தமிழ்

தலைப்பு : தேசியம் காத்த செம்மல்

வகுப்பு : 6 ஆம் வகுப்பு

Downloaded From
www.nagaicollege.com
Scanned by CamScanner

மாணவர் : வணக்கம் ஐயா

ஆசிரியர் : வணக்கம் மாணவர்களே

ஆசிரியர் : நம் நாட்டு விடுதலைக்கு போராடியவர்கள் யார்? யார்? (அ)

மாணவர் : பதில் கூறல்

ஆசிரியர் : அவர்களில் ஒருவரான தேசியம் காத்த செம்மல் பசும்பொன் முத்துராமலிங்கதேவர் பற்றிதான் நாம் இவ்வகுப்பில் பார்க்கப்போகிறோம் [கு.ந)

ஆசிரியர் : முத்துராமலிங்கர் பற்றி உனக்கு தெரிந்தவற்றைக் கூறுக (க.எ.)

மாணவர் : இவர் பசும்பொன் என்னும் ஊரில் பிறந்தவர்

ஆசிரியர் : நன்று

ஆசிரியர் : இவர் இராமநாதபுரம் மாவட்டத்தில் பசும்பொன் எனும் ஊரில் 1908 ஆம் ஆண்டு உக்கிரபாண்டியனார், இந்திராணி அம்மை ஆகியோருக்கு மகனாய் அவர் பிறந்ததும் அன்னை இழந்தார் (நி)

மாணவர் : யார் அவரை வளர்த்தது ? ஐயா

ஆசிரியர் : இவரை இஸ்லாமிய பெண்மணி ஒருவர் தாயாகி பாலூட்டி வளர்த்தார் பின்பு அவரது பாட்டியின் அரவணைப்பில் வளர்ந்தார் (பு.மா)

Downloaded From www.nagaicollege.com
Scanned by CamScanner

மாணவர் : முத்துராமலிங்கர் கல்வி பயின்றாரா? ஐயா

ஆசிரியர் : இவரது பாட்டியின் வீட்டிலேயே இவருக்கு கல்வி கற்பித்த ஆசிரியர் குறைவற வாசித்தான் என்பவர் இவர் தொடக்கப் பள்ளியை கமுதியில் கிறிஸ்தவ பாதிரியார்களிடம் பெற்றார் (கு.ர)

மாணவர் : உயர்நிலைக் கல்வியை முடித்து விட்டாரா?

ஆசிரியர் : அவரது பள்ளி படிப்பு நின்றுவிட்டது அவர் அதற்கு மாறாக கேள்வி அறிவையும், பட்டறிவையும் மிகுதியாக பெற்றார் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வல்லமை பெற்றார் (ஷிமா)

மாணவர் : வேறு எவற்றில் சிறப்புற்று விளங்கினார் ஐயா?

ஆசிரியர் : மேலும், சிலம்பம், குதிரையேற்றம், துப்பாக்கி சுடுதல் போன்றவற்றிலும் மருத்துவம், சோதிடம் ஆகியவற்றை இளமையிலேயே கற்றார் (நி)

மாணவர் : பொதுநலத் தொண்டுகள் ஏதாவது செய்தாரா ஐயா?

ஆசிரியர் : முத்துராமலிங்கர் மேற்கொண்டது இயக பொதுத் தொண்டே இவர் 32 சிற்றூர்களில் தமக்கு சொந்தமான நிலங்களை உகத தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பங்கிட்டு கொடுத்தார் (க.எ)

Downloaded From
www.nagaicollege.com
Scanned by CamScanner

மாணவர் : இவர் தீண்டாமை ஒழிப்பிலும் ஈடுபட்டாரா ஐயா

ஆசிரியர் : முத்துராமலிங்கம் நாட்டுப்பற்று அதிகமுடையவர். நம் நாட்டு விடுதலைக்கே தீவிர கொள்கை உடையவர் (மெ)

மாணவர் : இவரின் வழிகாட்டி யார்

ஆசிரியர் : நேதாஜி சந்திரபோஸ் அரசியல் வழிகாட்டியாக இவரை ஏற்றுக்கொண்டார் எனலாம் (தீ)

மாணவர் : இவரின் அரசியல் களம் பற்றி கூறுங்கள் ஐயா ?

ஆசிரியர் : இவர் தேர்தலில் போட்டியிட்டு ஐந்துமுறை வெற்றி வாகை சூடியவர் (கு.ஏ)
55 ஆண்டுகள் வாழ்ந்து 1963 ஆம் ஆண்டு அக்டோபர் 30 ல் இயற்கை எய்தினார் (பு.மா)

மாணவர் : அந்நாள் நாள்காட்டி அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆசிரியர் : நன்று

ஆசிரியர் : நன்றி மாணவர்களே நாளைய வகுப்பில் துணைப்பாடம் பார்ப்போம்.

மாணவர் : நன்றி ஐயா

Downloaded From www.nagaicollege.com
Scanned by CamScanner

## பல்வகை தூண்டல் திறன்.

| உட்கூறுகள் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அசைவு | ✓ | | | | | | | | | | |
| மெய்ப்பாடு | | | | | | | | | | ✓ | |
| குரல் ஏற்றத் தாழ்வு | | ✓ | | ✓ | | ✓ | | | | | |
| கவனம் ஈர்த்தல் | | | ✓ | | | | | | ✓ | | |
| இசை மாற்றம் | | | | | | | ✓ | | | | |
| நிறுத்தம் | | | | ✓ | | | | ✓ | | | ✓ |
| புலன் மாற்றம் | | | | | ✓ | | | | | | |

Downloaded From www.nagaicollege.com
Scanned by CamScanner

# விளக்குதல் திறன்

| உட்திறன்கள் | சுருக்க எழுத்துகள் |
|---|---|
| தொடங்கும் திறன் | (தொ. தி) |
| தொடர் இணைப்பு சொற்கள் | (தொ. இ. சொ) |
| முக்கிய கருத்துகளை பயன்படுத்துதல் | (மு. க. ப) |
| மெய்ப்பாடு | (மெ) |
| முற்றுவிக்கும் வாக்கியம் | (மு. வா) |

பயிற்சி ஆசிரியர் பெயர் : மு. மூவேந்தன்

திறன் : விளக்குதல் திறன்

பாடம் : தமிழ்

தலைப்பு : ஏர்முனை

வகுப்பு : 7 ஆம் வகுப்பு

Downloaded From www.nagaicollege.com

Scanned by CamScanner

மாணவர் : வணக்கம் ஐயா

ஆசிரியர் : வணக்கம்

ஆசிரியர் : சபா உன் தந்தை என்ன வேலை செய்கிறார் (தொகு)

மாணவர் : விவசாயம் ஐயா

ஆசிரியர் : நம் நாட்டின் முதன்மைத் தொழில் என்ன?

மாணவர் : வேளாண்மை ஐயா

ஆசிரியர் : நன்று ! உழைப்பாளிகளை அதிகம் கொண்டு விளங்கும் நம் நாடு வேளாண்மை தன் கண்களாகக் கொண்டு விளங்குகிறது (தொ. கி. தொ)

மாணவர் : சரி ஐயா

ஆசிரியர் : உழவுத் தொழிலுக்கு அடிப்படையாகக் கொண்டு இருப்பது எது ? (மை)

மாணவர் : ஏர் ஐயா

ஆசிரியர் : மிக நன்று

இப்பாடலில் ஏர் முனைக்கு இணையான வேறு தொழில் ஒன்றும் இல்லை. இத்தொழிலில் இருக்கும் வரை நமக்கு பஞ்சமே இருக்காது (மு.க.ப)

மாணவர் : ஏர் முனைக்கு பயன்படுவன எந்த மாடுகள் ஐயா?

Downloaded From www.nagaicollege.com
Scanned by CamScanner

ஆசிரியர் : உழவு பாடுகள்

பூமியிலே மாரியெல்லாம் சூரியனாலே - பயிர்
பூத்தும் காய்ப்பதும் மாரியினாலே - நாம்
சேமமுற நாள்முழுவதும் உழைப்பதனாலே - இந்த
தேசமெல்லாம் செழித்திடுவது நம்கையாலே

விளக்கம் :

கதிரவனாலே மழை பொழிந்து நிலத்தில் பயிர்களும் பூத்துக் காய்த்து உள்ளன. உழைப்பால் நாடும் நலம் பெறும் (தொ.தி)

ஆசிரியர் : மாரி என்றால் என்ன?

மாணவர் : மழை ஐயா

ஆசிரியர் : சேமம் என்றால் என்ன?

மாணவர் : நலம் அம்மா

ஆசிரியர் : சரியாக கூறினர்

நெத்தி வேர்வை சிந்தினோமே முத்துமுத்தாக - அது
நெல்மணியாய் விளைஞ்சிருக்கும் கொத்துக் கொத்தாக

விளக்கம் : முத்து முத்தாக வியர்வையை நிலத்தில்

Downloaded From
www.nagaicollege.com
Scanned by CamScanner

விட்டு உழைத்தால் தான் கொத்துக் கொத்தாக நெல்மணிகள் விளையும் அதை நாம் பயன்படுத்த ஓர் சிறந்த வழி எனலாம்.

ஆசிரியர் : நெற்றி வியர்வை என்றால் என்ன?

மாணவர் : உழைக்கும் போது உண்மையான உழைப்பிற்கு அளிக்கும் பயன் ஐயா (மு. வா)

ஆசிரியர் : கீழே குனிந்து இருக்கும் மாணவரை நெல்மணி முட்டு முட்டாக என்றால் என்ன? (மு.க.ப)

மாணவர் : குவியல் குவியலாக இருப்பது ஐயா

ஆசிரியர் : நன்று

நன்றி மாணவர்களே நாளை மீதம் உள்ள பாடலைக் காண்போம்

மாணவர் : நன்றி ஐயா

Downloaded From
www.nagaicollege.com
Scanned by CamScanner

## விளக்குதல் திறன்

| உட்கூறுகள் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தொடங்கும் திறன் | ✓ | | | | ✓ | | | | | |
| தொடர் இணைப்பு சொற்கள் | | ✓ | | | | | | | | |
| முக்கிய குறிப்புகளை பயன்படுத்தல் | | | | ✓ | | | ✓ | | | |
| மெய்ப்பாடு | | | ✓ | | | | | | | |
| முற்றுவிக்கும் வாக்கியம் | | | | | | ✓ | | | | |

Downloaded From www.nagaicollege.com
Scanned by CamScanner

# தொடர் வினாக்கள் கேட்கும் திறன்

| உட்கூறுகள் | சுருக்க எழுத்துகள் |
|---|---|
| எண்ணத்தூண்டல் | (எ.தூ) |
| மேன்மேலும் செய்திகளை வரவழைத்தல் | (மே.மே.செ.வ) |
| முறையான விளக்கம் | (மு.வி) |
| பாடம் பற்றிய விழிப்புணர்வு | (பா.ப.வி) |
| திசை திருப்புதல் | (தி.தி) |

பயிற்சி ஆசிரியர் பெயர் : மு. பூவேந்தன்

திறன் : தொடர்வினா கேட்கும் திறன்

பாடம் : தமிழ்

தலைப்பு : எளிமையில் பெரியார்

வகுப்பு : ஆறாம் வகுப்பு

Downloaded From www.nagaicollege.com
Scanned by CamScanner

ஆசிரியர் : வணக்கம் மாணவர்களே

மாணவர் : வணக்கம் ஐயா

ஆசிரியர் : மனிதர்களின் குணம் பற்றிக் கூறு

மாணவர் : பதில் கூறல்

ஆசிரியர் : நன்று, பகுத்தறியும் குணம் மனிதர்களுக்கு மட்டுமே உரியது. பகுத்தறிவு பகலவன் எனக் குறிப்பிடும் நபர் யார் (வெ.மே.செ.வ)

மாணவர் : தந்தை பெரியார்

ஆசிரியர் : மிக நன்று. பெரியாரின் இயற்பெயர் என்ன? (எ.த)

மாணவர் : மாணவர்கள் பதில் கூறினர்

ஆசிரியர் : அவர் பிறந்த ஊர் தெரியுமா ?

மாணவர் : ஈரோடு மாவட்டம் ஐயா

ஆசிரியர் : அவரது பெற்றோர் பெயரை உடனே கூறு (பா.ப.தி)

மாணவர் : வெங்கடசாமி அம்மன் அம்மாள்

ஆசிரியர் : நன்று

மாணவர் : அவர் இந்திய மக்களிடம் சாதி உயர்வு மத வேறுபாடு அகற்ற பாடுபட்டார். ஐயா

Downloaded From
www.nagaicollege.com
Scanned by CamScanner

ஆசிரியர் : நம் கலைச்செல்வி பெரியார் எந்த கட்சியில் இருந்தார் என உனக்கு தெரியுமா? (தி.தி)

மாணவர் : காங்கிரஸ் கட்சி ஐயா

ஆசிரியர் : மிக நன்று

தந்தை பெரியார் ஈடுபட்ட மறியல் பற்றி உனக்குத் தெரியுமா? (தி.தி)

மாணவர் : தெரியவில்லை ஐயா

ஆசிரியர் : சொல் உனக்கு தெரியுமா?

மாணவர் : கள்ளுக்கடை மறியல் ஐயா

ஆசிரியர் : நன்று

மாணவர் : கள்ளுக்கடை மறியல் பற்றி கூறுங்கள் ஐயா

ஆசிரியர் : அவர்கள் கள் இறக்குவதைத் தடுக்க தன்னுடைய தோப்பிலிருந்த தென்னையை வெட்டிச் சாய்த்தார் (டு.வி)

ஆசிரியர் : பெரியார் கதர் ஆடையை மக்கள் அணிய வேண்டும் என்பதற்காக என்ன செய்தார்? மணி (மெ.ஒ.செ.வ)

மாணவர் : பரப்புரையை மேற்கொண்டார் ஐயா

ஆசிரியர் : சுயமரியாதைக்கு வித்திட்டவர் யார்? சொல் (நெ.ஒ.செ.வ)

Downloaded From www.nagaicollege.com
Scanned by CamScanner

மாணவர் : தெரியவில்லை ஐயா

ஆசிரியர் : சுயமரியாதை என்பது தன்னைத்தானே மதிக்க வேண்டும் பிறரையும் மதித்தல் வேண்டும் (மு.வி)

மாணவர் : ஈ.வெ.ரா அவரின் புனைப்பெயர் ஒன்று கூறுக

ஆசிரியர் : வைக்கம் வீரர், பகுத்தறிவு பகலவன் போன்ற பெயர்கள் பெரியாரின் சிறப்புப் பெயர்கள் (சி.த)

மாணவர் : பெரியாருக்கு வைக்கம் வீரர் என்ற பெயர் சூட்டப்பட காரணம் தெரியுமா? (மெ. மே. சூ.வ)

ஆசிரியர் : கேரளாவில் வைக்கம் என்னும் ஊர் தாழ்த்தப்பட்ட மக்கள் கோவில் தெருவில் நடப்பதற்கு தடை இருந்தது அதை எதிர்த்து போராடி வெற்றி பெற்றதன் எதிர்த்து போராடி வெற்றி பெற்றதால் வைக்கம் வீரர் என்றார் (பா.வ.வி)

ஆசிரியர் : ஐக்கிய நாடுகள் அவை பெரியாருக்கு என்னவிருது வழங்கியது (எ.தா)

மாணவர் : யுனெஸ்கோ விருது

ஆசிரியர் : நன்றி மாணவர்களே! நாளை துணைப்பாடம் பார்ப்போம் ஈ

மாணவர் : நன்றி ஐயா

Downloaded From
www.nagaicollege.com
Scanned by CamScanner

# வலுவூட்டிகளைப் பயன்படுத்தும் திறன்

| உட்திறன்கள் | சுருக்க எழுத்துகள் |
|---|---|
| உடன்பாட்டு மொழிசார் வலுவூட்டிகள் | (உ. மொ. வ) |
| திரும்பக் கூறுதல் | (தி. கூ) |
| அதிகப்படியான மொழிசார் வலுவூட்டிகள் | (அ. மொ. வ) |
| உடன்பாட்டு மொழிசாரா வலுவூட்டிகள் | (உ. மொ. வ) |
| மாணவரின் கருத்துகளை கரும்பலகையில் எழுதுதல் | (மா. க. எ) |

பயிற்சி ஆசிரியர் பெயர் : மு. மேகலா

திறன் : வலுவூட்டிகளைப் பயன்படுத்தும் திறன்

பாடம் : தமிழ்

தலைப்பு : இராமாயணம்

வகுப்பு : 7 ஆம் வகுப்பு

Downloaded From www.nagaicollege.com
Scanned by CamScanner

ஆசிரியர் : வணக்கம் மாணவர்களே

மாணவர் : வணக்கம் ஐயா !

ஆசிரியர் : கம்பராமாயணம் தெளிவாகப் பாடம் நடத்திய பிறகு அதில் முக்கியமானவற்றை மாணவர்களிடம் மீண்டும் கேட்டு மாணவர்களின் புரிந்து கொள்ளும் தன்மையை அறிந்து கொள்கிறார்

ஆசிரியர் : இராமாயணத்தை இயற்றியவர் யார்?

மாணவர் : வான்மீகி

ஆசிரியர் : மிகவும் நன்று என்று பாராட்டி மாணவன் கூறிய பதிலை மீண்டும் கூறிக் கரும்பலகையில் தெளிவாக எழுதுகிறார் (மா. து. க) (உ. மொ. வ)

ஆசிரியர் : வான்மீகி எந்த மொழியில் இராமயணத்தை இயற்றினார்

மாணவர் : வான்மீகி வடமொழியில் இராமயணத்தை இயற்றினார்

ஆசிரியர் : மிகவும் சரியானது என்று பாராட்டி மாணவன் கூறிய பதிலை வரவேற்கும் - ம் என்ற ஒலியுடன் தலையசைத்து மேலும் சரியான விடையைத் திரும்பக் கூறிக் கரும்பலகையில் எழுதுகிறார்

(தி. கூ) (அ. மொ. வ)

Downloaded From
www.nagaicollege.com
Scanned by CamScanner

ஆசிரியர் : தமிழ் மொழியில் இராமாயணத்தை இயற்றியவர் யார்?

மாணவர் : கம்பர்

ஆசிரியர் : நன்று என்று பாராட்டி கைகை மேலும் தன் கைகளை விரல்விட்டு 'ஒன்று' என எண்ணுதல் பிறகு அவரை பெயருக்கு வேறு பெயர் கவிச்சக்ரவர்த்தி கம்பர் எனவும் கூறி மீண்டும் அதைக் கரும்பலகையில் எழுதுகிறார்

(மா.து.க) (உ.பொ.மொ.வ) (தி.வ)

ஆசிரியர் : தசரதனுக்கு எத்தனை மனைவிகள் கோசலை, கைகேயி, சுமத்திரை

ஆசிரியர் : ம்..ம் எனக்கூறி கைகை மேலும் மொத்தம் மூன்று என்று காட்டி கரும்பலகையில் எழுதுகிறார் பிறகு நன்று என்று பாராட்டிக் திரும்பக்கூறினார்

(உ.மொ.வ) (தி.த.வ.த)

ஆசிரியர் : இராமனை அடையாளம் கண்டு கொள்ள ஏதேனும் குறியீடுகள் தருக?

மாணவர் : கையில் சங்கு சக்கரம், நெற்றியில் திருநாமம் முதலியன.

ஆசிரியர் : கம்பராமாயணம் எத்தனை காண்டங்களை உடையது

Downloaded From
www.nagaicollege.com
Scanned by CamScanner

மாணவர் : அறு காண்டங்களை உடையது

ஆசிரியர் : மிகவும் நன்று எனப்பாராட்டிக் கரும்பலகையில் மாணவன். நதிய பதிலை எழுதினார் (மா.து.க)

மாணவர்களுக்கு கம்பராமாயணத் தை வரலாற்றை நினைவூட்டுமாறு தந்தார்

ஆசிரியர் : நன்றி மாணவர்களே !

மாணவர் : நன்றி ஐயா !

Downloaded From
www.nagaicollege.com
Scanned by CamScanner

| உட்கூறுகள் | வழங்குமுறைகளில் திறன் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| உடன்பாட்டு மொழிசார் வழங்குமுறைகள் | ✓ | | | | | ✓ | | | ✓ | |
| திரைப்படங்களும் வேற்றுமையில் கருத்தும் | | ✓ | | ✓ | | | | | | ✓ |
| திருப்புமான மொழிசார் வழங்குமுறைகள் | | ✓ | | | ✓ | | ✓ | | ✓ | |
| உடன்பாட்டு மொழியாக வழங்குமுறைகள் | | | | ✓ | | | | ✓ | ✓ | |
| மாணவர்களின் திறன்களை கண்டறியும் பகுதி | ✓ | | ✓ | | | ✓ | | | | ✓ |

# கரும்பலகையை பயன்படுத்தும் திறன்

| உட்கூறுகள் | சுருக்க எழுத்து |
| --- | --- |
| அழகாக எழுதுதல் | (அ.எ) |
| தெளிவாக எழுதுதல் | (தெ.எ) |
| பொருத்தமானதாக எழுதுதல் | (பொ.எ) |

பயிற்சி ஆசிரியர் பெயர் : மு. மூவேந்தன்

திறன் : கரும்பலகையை பயன்படுத்தும் திறன்

பாடம் : தமிழ்

தலைப்பு : சார்பெழுத்துகளின் வகைகள்

வகுப்பு : 7 ம் வகுப்பு

Downloaded From
www.nagaicollege.com
Scanned by CamScanner

ஆசிரியர் : வணக்கம் மாணவர்களே!

மாணவர் : வணக்கம் ஐயா!

ஆசிரியர் : மாணவர்களே! சார்பெழுத்துகளின் வகைகள் பற்றி பார்க்கலாம் நம் தமிழ்மொழியிலும் உயிர் எழுத்து பன்னிரண்டும் மெய்யெழுத்து பதி னெட்டும் உயிர்மெய் எழுத்து ஆகும் (அ.எ)

ஆசிரியர் : சார்பெழுத்துகள் என எதனை குறிப்பிடுகிறோம்?

மாணவர் : முதலெழுத்துகளைச் சார்ந்து வரும் எழுத்துகளைச் சார்பெழுத்துகள் என்கிறோம்.

ஆசிரியர் : உடல் - வண்ணமிட்ட இச்சொல்லில் உ என்பது உயிர் எழுத்து ட, ல் என்பன என்ன எழுத்துகள்?

மாணவர் : ட உயிர்மெய் எழுத்து ல் என்பது மெய் எழுத்து

ஆசிரியர் : நன்று என கூறி மாணவன் கூறிய பதிலை கரும்பலகையில் எழுதுகிறார் (தை.எ)

ஆசிரியர் : முதலெழுத்துகளின் எண்ணிக்கை யாவை?

மாணவர் : முப்பது

Downloaded From www.nagaicollege.com
Scanned by CamScanner

ஆசிரியர் : ஆய்தம் எழுத்து எந்த எழுத்து வகையைச் சார்ந்தது?

மாணவர் : சார்பெழுத்து

ஆசிரியர் : நன்று என கூறி கரும்பலகை தெளிவாக எழுதுகிறார் (கே.எ)

ஆசிரியர் : நன்று என கூறி ட் + அ = ட, ட் என்பது மெய்யெழுத்து அ என்பது எழுத்து சேர்ந்து ட என்னும் உயிர்மெய் எழுத்தாக பிறந்தது. (அ.எ)

ஆசிரியர் : சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும்

மாணவர் : பத்துவகைப்படும்.

ஆசிரியர் : உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் என கரும்பலகையில் எழுதுகிறார் (மெ.எ) (அ.எ)

மாணவர் : முதலெழுத்து, சார்பெழுத்து பற்றி நாங்கள் தெரிந்து கொண்டோம்

ஆசிரியர் : நன்றி மாணவர்களே!

மாணவர் : நன்றி ஐயா!

Downloaded From www.nagaicollege.com
Scanned by CamScanner

கரும்பலகை பயன்படுத்தும் திறன்

| உட்கூறுகள் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அழகாக எழுதல் | ✓ | | | | ✓ | | | ✓ | | ✓ |
| தெளிவாக எழுதல் | | | ✓ | | | ✓ | | | ✓ | ✓ |
| பொருத்தமான வரிசை எழுதல் | | ✓ | | ✓ | | | ✓ | | | ✓ |

Downloaded From
www.nagaicollege.com
Scanned by CamScanner